**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109458

1. District : மாவட்டம் **கடலூர்** PS: காவல்நிலையம் **ஊ.த.க. பிரிவு** Year: ஆண்டு **2023** FIR No.: மு.த.அ. எண் **6/2023** Date: நாள் **18.04.2023**

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7, 12
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 12.04.2023 Date to : நாள் வரை 13.04.2023
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.30 hrs Time to : நேரம் வரை 15.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.04.2023 Time : நேரம் 1500 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I Time : நேரம் 1500 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **கணினி தட்டச்சு மூலமாக**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **சுமார் 2 கி.மீ. தென்கிழக்கு**
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **கடலூர் மாநகராட்சி அலுவலகம், கடலூர்**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -- District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **G.பரணி** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **கோவிந்தசாமி**
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **33** (d) Nationality : நாட்டினம் **இந்தியன்** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் ---- Place of Issue : வழங்கப்பட்ட இடம் ---
(f) Occupation : தொழில் **தனியார் வேலை** (g) Address : முகவரி **D-3,தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, குண்டுசாலை, செம்மண்டலம், கடலூர்**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1) ரகோத்தமன், மாநகராட்சி ஊழியர், கடலூர் மாநகராட்சி.**
**2) ஆறுமுகம், உரிமையாளர், பங்கஜம் பிளானர்ஸ், கடலூர்**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**வாதியால் தாமதம்**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

நான் 17.04.2023 ஆம் தேதி மாலை 15.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நிலையம் ஆஜரான கடலூர், செம்மண்டலம், குண்டுசாலை, D–3,தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பை தெருவைச் சேர்ந்த கோவிந்தசாமி மகன் G.பரணி என்பவர், புகார் மனுவினை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : அனுப்புனர் G.பரணி, வயது 33, த/பெ கோவிந்தசாமி, D–3,தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, குண்டுசாலை, செம்மண்டலம், கடலூர். (செல் 8144554758), பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். நான் கடலூர், செம்மண்டலம், குண்டுசாலை, D–3,தமிழ்நாடு வீட்டு வசதி

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

G.Barani 18/04/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

18-04-2023 at 09.45 hrs.

Name: பெயர் தி. திருவேங்கடம் ...........................
Rank: நிலை காவல் ... ஆய்வாளர் No. எண் ..........,
ஊ.த.க. பிரிவு கடலூர்.

வாரிய குடியிருப்பு என்ற முகவரியில் உள்ள வீட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எங்க அப்பா கோவிந்தசாமி கோர்டில் அமினாவாக வேலை பார்த்து ரிட்டையர்டு ஆகிவிட்டார். எங்க அப்பா கோவிந்தசாமி மற்றும் அம்மா செல்வி ஆகியோர் பெயரில் கடலூர் மாநகராட்சி எல்லை, மஞ்சக்குப்பம், எண்.28, மீனாட்சி சுந்தரம் நகர் – பெண்ணையார் ரோடு என்ற முகவரியில் காலிமனை உள்ளது. இந்த காலிமனையில் வீடு கட்ட நாங்கள் முடிவு செய்தோம். இதற்காக கடலூர் மாநகராட்சியில் கட்டிட அனுமதி உரிமம் பெறுவது சம்மந்தமாக நான் பிப்ரவரி மாதத்தில் கடலூர் மாநகராட்சி அலுவலகம் சென்று, அங்குள்ள கட்டிட பிரிவிற்கு சென்று விசாரித்தேன். அங்கிருந்தவர்கள் எங்கள் அலுவலகத்திற்கு நேராக வந்தால் உங்களால் கட்டிட அனுமதி உரிமம் பெற முடியாது, கடலூர் புதுப்பாளையத்தில் உள்ள பங்கஜம் பிளானர்ஸ் மூலமாக வந்தால் உடனடியாக உங்க வேலை முடியும் என சொன்னார்கள். அதன்படி நான் பிப்ரவரி மாதத்தில் பங்கஜம் பிளானர்ஸ் சென்று, அங்கிருந்த அதன் உரிமையாளர் ஆறுமுகம் என்பவரை சந்தித்து, அவர் மூலமாக கட்டிட அனுமதி உரிமம் பெறுவதற்காக ஆன்லைனில் விண்ணப்பம் செய்தேன். பிறகு பங்கஜம் பிளானர்ஸ் அலுவலகத்தில் வைத்து, ஆன்லைனில் கட்டிட அனுமதி உரிமத்திற்கு அரசுக்கு 08.04.2023 அன்று ரூ.19,050/– கட்டணம் செலுத்தினேன். அதற்கு பற்று சீட்டு எண். 093/CP/23-24/0000038 வழங்கினார்கள். மேலும் பங்கஜம் பிளானர்ஸ் உரிமையாளர் ஆறுமுகம் கட்டிட வரைப்படம் மற்றும் சேவை கட்டணமாக அவர் கேட்ட பீஸ் ரூ.10,000/–த்தை செலுத்தினேன். கட்டணம் கட்டிய பிறகும் கட்டிய அனுமதி உரிமம் வழங்காமல் இருந்துவந்ததால், 12.04.2023 அன்று காலை பங்கஜம் பிளானர்ஸ் ஆறுமுகத்திடம், கட்டிய அனுமதி உரிமம் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டேன். அதற்கு ஆறுமுகம் என்னிடம் கட்டிட அனுமதி உரிமம் பெற விண்ணப்பம் செய்தால் மட்டும் போதாது, கடலூர் மாநகராட்சி ஊழியர்களை கவனித்தால் தான் உன்னுடைய வேலை முடியும் என சொல்லி, கடலூர் மாநகராட்சி அலுவலகத்தில் வேலை செய்யும் ரகோத்தமன் என்பவரை சந்திக்குமாறு கூறினார். அதன்படி அன்றே காலை சுமார் 11.30 மணிக்கு கடலூர் மாநகராட்சி அலுவலகம் சென்று, அங்கிருந்த ரகோத்தமன் என்பவரை சந்தித்து எங்களது கட்டிய அனுமதி உரிமம் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர், கட்டிட அனுமதி உரிமம் வழங்குவதற்கு ரூ.20,000/– தர வேண்டும் என சொன்னார். அதற்கு நான் அவரிடம் ஏற்கனவே மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்திவிட்டதாக சொல்லி, அதற்கான ரசீதை அவரிடம் காட்டினேன். அவர் அதை

வாங்கி பார்த்துவிட்டு, இந்த பணம் அரசாங்கத்திற்கு, நான் கேட்கிற பணம், எனக்கும், இந்த அலுவலகத்தில் பணிபுரியும் சில அலுவலர்களுக்கும் சேர வேண்டியது என சொன்னார். மேலும் ரூ.20,000/– பணத்தை பங்கஜம் பிளானர்ஸ் ஆறுமுகத்திடம் கொடுக்குமாறும், அந்த பணம் எப்பவும் போல தானா எங்களிடம் வந்து சேர்ந்துவிடும், அதனை நாங்கள் வழக்கம் போல பங்கு பிரித்து கொள்வோம். மேலும் பணம் எங்களுடைய கைக்கு வந்தால் தான் கட்டிட அனுமதி உரிமம் உங்களுக்கு கிடைக்கும் என சொன்னார். மறுநாள் 13.04.2023 அன்று மாலை சுமார் 03.00 மணிக்கு நான் பங்கஜம் பிளானர்ஸ் ஆறுமுகத்தை கடலூர் மாநகராட்சி அலுவலகத்தில் சந்தித்து, ரகோத்தமன் என்பவரை சந்தித்த விவரத்தை சொன்னேன். அதற்கு அவர், நீங்கள் சந்தித்த விவரத்தை ரகோத்தமன் என்னிடம் சொன்னார், மேலும் கட்டிட அனுமதி உரிமம் வழங்க அவருக்கு ரூ.20,000/– தர வேண்டும் எனவும் சொன்னார். இந்த பணத்தை தராவிட்டால் உங்களது கட்டிட அனுமதி உரிமம் கிடைக்காது என சொன்னார். அவர் சொன்ன பணத்தை என்னிடம் கொடுத்துவிட்டால் உடனடியாக உங்களது கட்டிட அனுமதி கிடைத்துவிடும் என சொன்னார். அதற்கு நான் அவரிடம் எங்க அப்பா, அம்மாவிடம் பேசிவிட்டு வந்து சொல்கிறேன் என சொல்லிவிட்டு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து எங்க அப்பா மற்றும் அம்மாவிடம் சொன்னேன். அவர்களுக்கு லஞ்சம் கொடுத்து கட்டிட அனுமதி பெற விருப்பமில்லை என சொன்னார்கள். மேலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கடலூர் லஞ்ச ஒழிப்பு துறையில் என்னை புகார் கொடுக்க சொல்லி, அவர்கள் லஞ்சமாக கேட்ட ரூ.20,000/– பணத்தையும் என்னிடம் கொடுத்தார்கள். நான் என்னுடைய தொழில் சம்மந்தமாக வெளியூர் சென்று விட்டதால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகார் மனுவை தங்களிடம் இன்று கொடுத்து கொண்டேன். மேலும் அவர்கள் கேட்ட லஞ்ச பணம் ரூ.20,000/–த்தை கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு [s/d- G.Barani, 17/04/2023].

சமார்ப்பிக்கப்பட்டது, மேற்படி வாதியின் புகார் மனுவை நான் 17.04.2023 ஆம் தேதி மாலை 15.00 மணிக்கு பெற்றேன். மேலும் வாதியின் புகாரில் கூறப்பட்ட குற்றச்சாட்டின் உண்மை தன்மை பற்றிய எனது முதல் நிலை விசாரணையில் புகாரில் கூறப்பட்ட குற்றச்சாட்டு உண்மையென தெரியவருகிறது. மேலும் வாதியின் புகாரில் கூறப்பட்ட குற்றம்சாட்டப்பட்ட நபர்களின் நடத்தை பற்றி விசாரிக்க, அவர்களின் முன் நடத்தைகள் மிகவும் மோசமாக இருப்பது தெரியவருகிறது. எனவே, வாதியின் புகாரில்

18/4/22

கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டில் பிடிக்கக்கூடிய குற்றத்திற்கான முகாந்திரம் இருப்பதினால், மேல்நடவடிக்கை எடுக்கும்பொருட்டு உத்திரவுபடி நான் இன்று **18.04.2023** ஆம் தேதி காலை **09.00** மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 06/2023, U/s 7, 12 of The Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்தேன். மேலும் உத்திரவுபடி வழக்கு கோப்பினை மேல் நடவடிக்கைக்காக கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ந.தேவநாதன் அவர்கள் வசம் ஒப்படைத்தேன். இதன் அசலை வாதி கொடுத்த புகார் மனுவுடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

அ. [signature]
18/4/23

அ. திருவேங்கடம்
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு கடலூர்.